**IN THE COURT OF SPECIAL COURT FOR**
**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**
**SPECIAL SESSIONS CASE NO.10 OF 2021**
**Deposition of Witness for : PW– 1 (LW–1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு.கமலகண்ணன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07–07–2026**

A2 to A5 present. A1 absent.

**முதல் விசாரணை –**

நான் மேனலூரில் குடியிருக்கிறேன் . நான் வெல்டராக வேலை செய்கிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியாது. 2019 கடைசியில் ஒயின்சாப் அருகில் சண்டை நடந்தது , அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் போலிசார் எழுதாத பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் . **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி போலிஸ் விசாரணையில் கூறியதில் இருந்து முற்றிலும் மாறுபட்டு சாட்சியம் அளிப்பதால் அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் போலிசார் விசாரணையில் கடந்த 17.05.2020 ம் தேதி ஞாயிற்று கிழமை என்பதால் கம்பெனிக்கு விடுமுறை விட்டார்கள் என்றும் 3.00 மணிக்கு எங்கள் பக்கத்து தெருவில் உறவினரான தேவகி என்பவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு வீட்டிலிருந்து அவர்களை பார்த்துவிட்டு மாலை சுமார் 5.00 மணிக்கு எங்கள் ஊரில் உள்ள அரசு மேல்நிலை பள்ளி அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் நடந்து வந்துக்கொண்டிருந்தபொழுது எனக்கு நன்கு தெரிந்த சுருட்டல் கிராமத்தை சேர்ந்த மணி என்பவரின் மகன்களான மோகன்ராஜ், ஜெய்சங்கர் இருவரும் ஓடிவந்து என்னை வழிமடக்கி என்னுடைய ஜாதிப்பெயரை சொல்லி திட்டி எவன்டா என் மச்சான் நவீன்குமார் செல்போனை டாஸ்மாக் கடையிடம் பிடிங்கி உடைத்தது என்று அசிங்கமாக பேசிக்கொண்டு இங்கு என்னடா நடந்து போர என கையில் வைத்திருந்த இரும்பு ராடால் இத்தோடு செத்துபோடா என்று எனது இடது முன்தலையில் அடித்தான் என்றும், அதனால் தலையில் ரத்தகாயம் ஏற்பட்டது என்றும் , சொல்லியுள்ளேன் என்றால் ஒயின்சாப் அருகில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது , நான் வேடிக்கை பார்ப்பதற்காகதான் போனேன் , யாரோ என்னை அடித்துவிட்டார்கள் . அவன் தம்பி ஜெய்சங்கர் உருட்டு கட்டையால் எனது வலதுகை மணிகட்டு , வலது கால் முட்டியில் அடித்து உள்காயம் ஏற்படுத்தினார்கள் என்றும் , அவர்களோடு வந்த அவர்கள் அக்கா மகன் நவீன்குமார் அவரின் அம்மா செல்வி , அப்பா சேரிமுத்து கல்லால் என் உடல் முழுவதும் அடித்து இத்தோடு செத்துபோடா இனிமேல் பிராந்தி கடையில் எவனாவது எங்ககூட சண்டைக்கு வந்தீங்கனா அவங்க எல்லோரையும் சாகடித்துவிடுவோம் என்று மிரட்டிக்கொண்டு அவர்கள் மோட்டார் சைக்கிளில் ஏறி சென்றுவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் 4 பேர் அடித்தார்கள் அவர்கள் எதிரிகள் தானா என்று தெரியவில்லை. அடிப்பட்ட என்னை என் அக்காவின் கணவர் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர் என்றும் , மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து என்னை பெட்டில் அட்மிட் செய்தார்கள் என்றும் இது சம்மந்தமாக செய்யார் டிஎஸ்பி என்னை

விசாரித்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் என்னை யாரும் விசாரிக்கவில்லை . நான்போலிஸ் விசாரணையில் மேற்சொன்னவாறு சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமரசமாகிவிட்டதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA

Digitally signed by V SUTHA
Date: 2026.07.07 18:46:41 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL**
**OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**